## தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்தப்படாதிருந்த கணக்காய்வுக் கட்டணம் ரூபா 269,883 ஆக காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிலுவையான கணக்காய்வுக் கட்டணம் என ரூபா 140,857 காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிலுவையான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 129,026 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளாக முன்கொண்டுவரப்பட்டிருந்த மீதிகளிற்கும் இடையே பின்வருமாறு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி | மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்பட்டிருந்த பெறுமதி | முன்னைய ஆண்டின் இறுதி மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளாக முன்கொண்டுவரப்பட்டிருந்த மீதிகளிற்கும் இடையிலான வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) சாதாரண நிதியம் | 110,895,505 | 111,971,955 | 1,076,450 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக நிதியம் | 1,161,576 | 1,471,037 | 309,461 |
| (இ) | மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் | 12,306,702 | 11,679,783 | (626,919) |
| (ஈ) | தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம் - களுத்துறை | 815,537 | 544,979 | (270,558) |
| (உ) | நிதிய இணையதளம் | - | 18,028 | 18,028 |
| (ஊ) | ராகம வைத்திய சாலையில் தரைக்கல் பதித்தல் செயற்திட்டம் | 155,378 | - | (155,378) |
| (எ) | குழந்தை மற்றும் சிறுவர் போசாக்கு சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் செயற்திட்டம் | 2,400,912 | 1,716,570 | (684,342) |
| (ஏ) | கண் வைத்திய சாலைக்கு கட்புல வில்லைகளை அன்பளிப்புச் செய்தல் | - | 22,500 | 22,500 |

### 1.2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

அரசாங்க நிறுவனமொன்றால் செயற்படுத்தப்படுகின்ற டிப்ளோமா பாடநெறியொன்றை பயில்வதற்காக தேசிய கண் வங்கியின் முகாமையாளரிற்கு ரூபா 92,000 தொகை தேசிய கண் வங்கியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் செயற்பாடுகளிலிருந்தான மிகை ரூபா 101,376,270 ஆக காணப்பட்டதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 73,205,838 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 28,170,432 வளர்ச்சி ஏற்பட்டமைக்கு சகல

வருமான மூலங்களும் ரூபா 62,685,496 ஆல் ஆல் அதிகரித்துமிருந்தமை விசேடமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்வேறு 6 செயற்பாடுகளிற்காக 4 தொடக்கம் 25 ஆண்டு கால வீச்சில் கிடைத்திருந்த ரூபா 7,659,081 கூட்டுத்தொகையானவை பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஆ) 1990 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை பல்வேறு நிறுவனங்களிடமிருந்து வெவ்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கிடைத்திருந்த மொத்தம் ரூபா 32,389,566 மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நோக்கங்கள் நிறைவேற்றப்படாது பொது நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) டெங்கு ஒழித்தல் செயற்திட்டத்தின் கீழ் நோயாளர்களின் இரத்த மாதிரிகளைப் பெற்றுக்கொள்கையில் வெளிப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மீளாய்வாண்டின் முதல் 9 மாதங்களில் டெங்கு ஒழித்தல் செயற்திட்டத்தின் கீழ் நோயாளர்களின் 2250 இரத்த மாதிரிகளைப் பரிசோதித்தல் இலக்காகக் காணப்பட்ட போதிலும் 1442 இரத்த மாதிரிகள் அல்லது 64 சதவீதம் மாத்திரமே பரிசோதிக்கப்பட்டிருந்தன.

(ii) இரத்த மாதிரிகளைச் சேகரிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்த தனியார் மருத்துவ மனைகளில் 3 இனால் 2012 திசெம்பர் மாதத்தில் எந்தவொரு இரத்த மாதிரியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் தனியார் மருத்துவ மனையொன்றால் மீளாய்வாண்டின் முதல் 09 மாதங்களில் 16 இரத்த மாதிரிகள் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோய் வேகமாகப் பரவும் காலத்தில் நோயாளர்களின் இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதன் போதியதன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்திப்பட முடியாதிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) டெங்கு ஒழித்தல் செயற்திட்டத்திற்கு 3 மாதங்களிற்காக ஆய்வுகூட நடவடிக்கைகளை வழங்கியமைக்காக ரூபா 4,510,000 தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முற்பணப் பிணைமுறியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சரியாக செலவின மதிப்பீட்டினைத் தயாரிக்காது முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் 3 மாத ஆய்வுகூட கட்டணமாக தனியார் நிறுவத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த முற்பணம் அந்நிறுவனத்தின் 6 மாதச் செலவினத்தை தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் 20 சுகாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 79,569,908 தொகையான ஒப்பந்தம் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய சுகாதார அபிவிருத்தி நிதிய கூட்டத் தீர்மானத்தின் படி அதனுடன் தொடர்புடைய கள ஆய்வினை மேற்கொண்டு அது தொடர்பான முழுமையான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான அறிக்கையினைச் சமர்ப்பிக்காது இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய கண் வைத்தியசாலையால் தேசிய கண் வங்கிக்கு இரண்டு ஆண்டுகளிற்காக ஒருங்கிணைந்த அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களின் நியமனக் காலம் முடிவுற்றிருந்த போதிலும், அதற்குமேலும் முறைப்படியான அங்கீகாரத்துடன் கால நீடிப்புச் செய்யப்படாது தேசிய கண் வங்கியினால் சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

டெங்கு செயற்திட்டத்தின் ஆய்வுகூட நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் தனியார் நிறுவனத்தின் மதியுரைஞருக்கு 2012 ஏப்ரல் மாதத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாவிற்கான விமானச் சீட்டுக் கட்டணத்திற்காக ரூபா 257,437 செலுத்தப்பட்டிருந்தது.

டெங்கு செயற்திட்டத்தின் சர்வதேச ஆய்வுகள் நியமத்தின் படி இடம்பெற வேண்டும் என்பதுடன் இவ்வாறான விசேட ஆய்வுகளிற்காக வெளிவாரி நிபுணர்களின் அவதானிப்புகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் சர்வதேச ஆய்வுகளில் இடம்பெறுவதாக சுகாதாரச் செயலாளர் பதிலளித்திருந்தார்.

## 3.4 நிதிகளின் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டில் அரசாங்க கூட்டுத்தாபனமொன்றினால் ரூபா 10,000,000 தொகை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் இராணுவ வீரர்களிற்கு தேவையான மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அந்த அன்பளிப்புத் தொகையில் 58.51 சதவீதம் அல்லது ரூபா 5,850,888 மீதியொன்று அந்த நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படாது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சுகாதார அபிவிருத்தி நிதியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கூட்டுத்தாபனமொன்றால் வைத்தியர்களின் உத்தியோகபூர்வ வதிவிடங்களை மேம்படுத்தல், பொது மக்களின் சுத்திகரிப்புச் செயற்பாடுகள் மற்றும் நீர் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் போன்ற செயற்பாடுகளிற்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 20,000,000 தொகை நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் மேற்படி தொகையில் மஹரகம பற்சிகிச்சைக் கல்லூரியின் மாணவியர்களின் செய்முறைப் பயிற்சிக்காக ரூபா 1,343,776 பெறுமதியான தளபாட உபகரணங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அந்த அன்பளிப்புத் தொகையிலிருந்து ரூபா 18,656,224 அல்லது 93.28 சதவீதம் 2012 திசெம்பர் 31 வரையிலும் (3 ஆண்டுகள்) சுகாதார அபிவிருத்தி நிதியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இங்கிரிய மாவட்ட வைத்தியசாலையின் 3 மற்றும் 4 ஆம் இலக்க வார்ட்களை கொண்ட கட்டிடத்தில் ரூபா 79,800 செலவிட்டு மின்சார வழங்கல் திருத்தப்பட்டிருந்த போதிலும், மின்சார முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக அடிக்கடி மின்சார விளக்குகள் எரிவடைந்திருந்தன.

மின்சார முறைமை 150 வருடங்களுக்கும் பழமைவாய்ததாக உள்ளமையால் அதிலுள்ள சிற்சில குறைபாடுகள் காரணமாக மின்சார விளக்குகள் எரிவடைவதாக செயலாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இங்கிரிய மாவட்ட வைத்தியசாலையின் வெளிவாரி நோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் திருத்தத்திற்காக பிடித்து வைக்கப்பட்டிருந்த ரூபா 30,042 தொகை 2012 மே 21 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தத்தில் காணப்பட்ட பின்வரும் குறைபாடுகளிற்காக பிடி காசு கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த இனத்தைச் சாராத இனமொன்றால் மூன்று ''டோ குளோசர்'' பொருத்தப்பட்டிருத்தல் மற்றும் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை அவை மூன்றும் செயலிழந்திருந்தமை.

(ii) உரிய தரத்திலும் குறைந்த பிளாத்திக் வகை தண்ணீர் குழாய் ரூபா 20,000 செலவில் பொருத்தப்பட்டிருந்தமை.

(iii) இரண்டு ''கெனபி ரூப்'' களைப் பொருத்துவதற்காக ரூபா 56,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒன்று மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தமை.

(ஆ) கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் விசேட குழந்தைகள் பிரிவின் அபிவிருத்திக்கான ரூபா 2,652,860 தொகைக்குரிய ஒப்பந்தம் 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டு 7 மாதங்கள் கடந்த பின்னர் ரூபா 636,100 ஆன மேலதிக வேலை மதிப்பீடு பிராந்திய கொள்வனவுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டு ரூபா 634,902 செலவிடப்பட்டிருந்தது.

(இ) வாரியபொல எம்பியூலன்ஸ் தரிப்பிடம் மற்றும் சாரதி உத்தியோகபூர்வ வதிவிடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத் தொகை (வரி நீங்கலாக) ரூபா 1,716,660 ஆகக் காணப்பட்டது. ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடு குடியிருப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச அடிப்படைத் தகமைகளின்றி தயாரிக்கப்பட்டிருந்தமையால் அது மீண்டும் ரூபா 340,000 ஆக திருத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அச்செயற்பாட்டினைப் பூரணப்படுத்துவதற்காக வேறொரு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. திட்டமிட்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை காரணமாக செயற்பாட்டினை முடிவுறுத்துவதற்கு 9 மாதம் தாமதிக்கப்பட்டிருந்தது.

(ஈ) யாழ்ப்பாணம், தெல்லிப்பளை புற்று நோயாளர்களிற்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்கும் நோக்குடன் தனியார் நிறுவனமொன்றால் பொது மக்களிடமிருந்து

நிதி சேகரிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 200,000,000 என மதிப்பிடப்பட்டிருந்தது. இத்தொகையினை சுகாதார அபிவிருத்தி நிதியத்தில் வைப்புச் செய்து செயற்திட்டச் செயற்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு மேற்படி நிறுவனம் இணங்கியிருந்ததுடன் 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி ஒப்பந்தம் அந்நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்பட்டன.

(i) 2012 மார்ச் 16 ஆந் திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் 4(ஏ) மற்றும் 4(1) ஆம் பிரிவின் படி பின்வரும் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வாரத்தினுள் ரூபா 100,000,000 தொகை நிதியத்தில் வைப்புச்செய்யப்பட வேண்டிய போதிலும், 2012 செப்தெம்பர் 14 ஆந் திகதியன்றே அத்தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தமை.

- உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதத்தினுள் ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதில் 5 மாதங்கள் கடந்த பின்னரே ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை

(ii) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.4.4(i) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தத் தொகையில் ஆகக்கூடியது 20 சதவீதம் முற்பணமாகச் செலுத்த முடியுமான போதிலும், அதில் 35 சதவீதமான ரூபா 68,679,412 தொகை வேலை ஆரம்பித்தல் முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதி 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதியான போதிலும், 2013 செப்தெம்பர் 05 ஆந் திகதி வரை நிர்மாணச் செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தினையும் அடைந்திருக்காமை.

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான ஏழு செலவின விடயங்கள் தொடர்பில் 33.8 சதவீதம் முதல் 228.4 சதவீதம் வரையான விலகல்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) முற்பணங்களை வழங்குதல்

பின்னிணைப்பு 1

**வருமா செலவினக் கூற்று**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் வருமானங்களும் செலவினங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | | |
|---|---|---|---|---|
| | 2012 | | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | | |
| ஜாதிக சம்பத லொத்தர் வருமானம் | 52,560,260 | | 39,228,040 | |
| நன்கொடைகள் | 155,139,494 | | 130,926,696 | |
| முதலீட்டு வட்டி | 30,538,493 | | 14,192,687 | |
| ஏனைய வருமானங்கள் | 9,878,521 | 248,116,768 | 1,083,848 | 185,431,271 |
| **செலவினம்** | | | | |
| நிர்வாக செலவினம் | 1,597,636 | | 1,190,256 | |
| நிதி மற்றும் எனைய செலவினம் | 16,420 | | 39,014 | |
| சுகாதார அபிவிருத்தி செயற்திட்ட செலவினம் | 145,126,441 | 146,740,497 | 110,996,163 | 112,225,433 |
| மிகை | | 101,376,271 | | 73,205,838 |
| முன்னைய ஆண்டின் சீராக்கம் | | 1,126,723 | | 6,157,268 |
| | | 102,502,994 | | 79,363,106 |

பின்னிணைப்பு 2

## முதலீட்டுக் கூற்று

நிலையான வைப்புக்கள்

| சான்றிதழின் இல. | முதலீடு செய்யப்பட்ட திகதி | முதலீட்டுக் காலம் | 2012 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 2012 இல் மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 2012 இல் மீளெடுத்தல் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 329646 | 2011.12.21 | 3 மாதம் | 63,000,000 | - | - | 63,000,000 |
| 331074 | 2011.12.21 | 1 ஆண்டு | 23,000,000 | - | - | 23,000,000 |
| 329711 | 2012.03.14 | 1 ஆண்டு | - | 10,000,000 | - | 10,000,000 |
| 329770 | 2012.05.30 | 3 மாதம் | - | 15,000,000 | - | 15,000,000 |
| 331081 | 2012.12.28 | 3 மாதம் | - | 1,500,000 | - | 1,500,000 |
| 331050 | 2012.12.12 | 3 மாதம் | - | 20,000,000 | - | 20,000,000 |
| 331049 | 2012.12.12 | 3 மாதம் | - | 20,000,000 | - | 20,000,000 |
| | | | 86,000,000 | 66,500,000 | - | 152,500,000 |

திறைசேரி உண்டியல்கள்

| சான்றிதழின் இல. | முதலீடு செய்யப்பட்ட திகதி | முதலீட்டுக் காலம் | 2012 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 2012 இல் மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 2012 இல் மீளெடுத்தல் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | நாட்கள் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 20101000226 | 2012.10.11 | 84 | 5,679,909 | - | | 6,244,852 |
| 201006221 | 2012.06.08 | 357 | 18,276,260 | - | | 19,592,146 |
| 2010060157 | 2012.06.08 | 357 | 3,729,604 | - | | 3,569,408 |
| 201010021 | 2011.10.07 | 91 | 1,965,360 | - | 1,965,360 | - |
| 2010100064 | 2011.10.07 | 91 | 16,184,124 | - | 16,184,124 | - |
| 314 | 2012.03.09 | 364 | 13,434,486 | - | - | 14,388,332 |
| 314 | 2012.11.16 | 91 | 23,673,177 | - | - | 23,505,905 |
| 314 | 2012.12.07 | 182 | 4,800,770 | - | - | 4,721,435 |
| 314 | 2012.11.23 | 182 | 7,703,416 | - | - | 7,556,080 |
| 314 | 2012.08.31 | 182 | 6,048,312 | - | - | 5,883,461 |
| 314 | 2012.08.31 | 364 | 12,129,573 | - | - | 11,475,942 |
| 314 | 2012.10.19 | 182 | 40,291,356 | - | - | 39,425,005 |
| M12B024498 | 2012.12.31 | 7 | - | 20,000,000 | - | 20,000,000 |
| M11B 024103 | 2011.12.28 | 6 | 14,500,000 | - - | 14,500,000 | - |
| M11B024104 | 2011.12.28 | 6 | 10,000,000 | - | 10,000,000 | - |
| | | | 178,416,347 | 20,000,000 | 42,649,484 | 156,362,566 |